


புதுடெல்லியில் நாடாளுமன்ற கூட்டத் தொடரையொட்டி நடைபெற்ற அனைத்துக் கட்சிக்கூட்டத்தில் மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோர் கலந்து கொண்டனர்.



'சமூகநீதிக்கான உலகின் முதல் ஓ.டி.டி' தளமாக லிபர்ட்டி கிரியேஷன்ஸ் சார்பில் 'பெரியார் விஷன்' ஓடிடி தளம் தொடக்க விழா நேற்று (21.7.2024) காலை சென்னை பெரியார் திடலில் எம்.ஆர். இராதா மன்றத்தில் நடைபெற்றது. 'பெரியார் விஷன்' ஓடிடி தளம் நேர்காணல் பதிவு அலுவலகத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் திறந்துவைத்தார். திமுக துணைப்பொதுச்செயலாளர் நாடாளு மன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நடிகர் சத்யராஜ், பெரியார் திரைப்பட இயக்குநர் ஞான.ராஜசேகரன் அய்.ஏ.எஸ்., மற்றும் ஓவியர் டிராட்ஸ்கி மருது திறப்பு விழாவில் கலந்துகொண்டனர். அதனைத் தொடர்ந்து நடிகவேள் எம்.ஆர்.ராதா மன்றத்தில் நடை பெற்ற 'பெரியார் விஷன்' ஓடிடி தளம் தொடக்க விழாவில் லிபர்ட்டி கிரியேஷன்ஸ் இயக்குநர் வீ.அன்புராஜ் அனைவரையும் வரவேற்றார்.

### 'சமூக நீதிக்கான உலகின் முதல் ஓ.டி.டி.' தளமாக – லிபர்ட்டி கிரியேஷன்ஸ் சார்பில்

# 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. தளம்! கி.வீரமணி திறந்து வைத்தார்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. - நடிகர் சத்தியராஜ் - ஞான.ராஜசேகரன் - ஓவியர் டிராட்ஸ்கி மருது பங்கேற்பு!

சென்னை, ஜூலை 21

'சமூக நீதிக்கான உலகின் முதல் ஓ.டி.டி.' தளமாக லிபர்ட்டி கிரியேஷன்ஸ் சார்பில் 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. தளம் தொடக்க விழா நேற்று (21.7.2024) காலை சென்னை பெரியார் திடலில் எம்.ஆர். இராதா மன்றத்தில் நடைபெற்றது. 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. தளம் நேர்காணல் பதிவு அலுவலகத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் திறந்து வைத்தார்.

தி.மு.க. துணை ப்பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, நடிகர் சத்யராஜ், பெரியார் திரைப்பட இயக்குநர் ஞான.ராஜசேகரன் அய். ஏ. எஸ்., மற்றும் ஓவியர் டிராட்ஸ்கி ஆகியோர் மருது திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நடிகவேள் எம்.ஆர்.ராதா மன்றத்தில் நடைபெற்ற 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. தளம் தொடக்க விழாவில் லிபர்ட்டி கிரியேஷன்ஸ் இயக்குநர் வீ.அன்புராஜ் அனைவரையும் வரவேற்றார்.

லிபர்ட்டி கிரியேஷன்ஸ் பெரியார் திரைப்படம், புரட்சிக்காரன் திரைப்படத்தை எடுத்து மக்களிடையே பகுத்தறிவுக்கருத்துகளை கொண்டு சேர்த்தது. இங்கே பத்திரிகைத்துறையில் முதலில் இ-பேப்பர் அறிமுகப்படுத்தியது விடுதலை நாளிதழ் தான். கொரோனா காலத்திலும் சூம் கூட்டங்கள் நடத்தியவர் தமிழர் தலைவர் ஆசிரியர். பெரியார் வெப் விஷன் அடுத்த தளம்தான் இந்த பெரியார் விஷன் ஓடிடி. ஸ்டிரீமிங் எளிதாக இருக்கும். யு டியுப் கட்டுப்பாடுகள் கடந்து இருக்கும். தந்தை பெரியார் கருத்துகளுடன் டெலி சீரியல்கள் ஒளிபரப்பாகும். பெரியார் திடலுக்கு கண்டென்ட் அளிப்பதில் பஞ்சமில்லை. மற்றவர்களுக்கு கண்டென்ட் கொடுப்பவர்கள் நாம். ஓடிடி உருவாக்கத்தில் பிரின்சு என்னாரெசு பெரியார், வசந்த், மதிசீலன் ஆகியோரின் கடும் முயற்சி பாராட்டத்தக்கது.

நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தூத்துக்குடியில் 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். அவருக்கு இந்த நேரத்தில் வாழ்த்துகள். இனமுரசு சத்யராஜ், இயக்குநர் ஞான. ராஜசேகரன், ஓவியர் டிராட்ஸ்கி மருது உள்ளிட்ட அனைவரையும் வரவேற்கிறோம்.

இவ்வாறு வரவேற்புரையில் வீ.அன்புராஜ் குறிப்பிட்டார்.

**காணொலி திரையிடல்**

பெரியார் விஷன் தொடக்க விழாவையொட்டி காணொலி திரையிட ப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தி.மு.க. துணைப்பொது ச்செயலாளர் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. (PERIYAR VISION OTT) தளத்தை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. வாழ்த்துச் செய்தி காட்சிப்பதிவு திரையிடப்பட்டது.

தி.மு.க. துணை ப்பொதுச்செயலாளர் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நடிகர் சத்யராஜ், பெரியார் திரைப்பட இயக்குநர் ஞான. ராஜசேகரன் அய்.ஏ.எஸ்., மற்றும் ஓவியர் டிராட்ஸ்கி மருது ஆகியோருக்கு திராவிடர் கழகத் தலைவர் அவர்கள் பொன்னாடை அணிவித்து இயக்க வெளியீடுகளை வழங்கி சிறப்பு செய்தார்.

'பெரியார் விஷன்' ஓடிடி அறிமுக விழாவில், ஓவியர் டிராட்ஸ்கி மருது, இயக்குநர் ஞ ா ன . ர ா ஜ சே க ர ன் அய்.ஏ.எஸ்., பிரச்சாரச்செயலா ளர் வழக்குரைஞர் அ. அருள்மொழி, பொருளாளர் வீ.குமரேசன் ஆகியோர் உரை ஆற்றினார்கள்.

கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் முன்னிலை உரையாற்றினார்.

நடிகர் சத்யராஜ், தி.மு.க. துணைப்பொதுச்செயலாளர் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரையைத் தொடர்ந்து, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விழா நிறைவு சிறப்புரை ஆற்றினார்.

பகுத்தறிவையும், மக்களுக்குப் பயன்படும் அறிவியல் தொழில்நுட்பத்தையும் வெகுவாகப் பயன்படுத்தவும், புதுமைகளை வரவேற்று பரப்பவும் செய்வார் தந்தை பெரியார்.

இக்காலத்தில் சிறியவர் முதல் பெரியோர் வரை பெருமளவில் அனைவராலும் பயன்படுத்தப்படக் கூடிய ஓ.டி.டி. தொழில்நுட்பத்தைத் துணைக் கொண்டு "Periyar Vision" எனும் பெயரில் 'சமூகநீதிக்கான உலகின் முதல் ஓ.டி.டி'யை லிபர்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் இன்று தொடங்கியுள்ளது.

ஒரு கொள்கைக்காகத் தொடங்கப்படும் உலகின் முதல் ஓ.டி.டி.யாக இதுவே ஆகும். இதில் உரையாடல்கள், உரைவீச்சுகள், நேர்காணல்கள், ஆவணப்படங்கள், குறும்படங்கள், வலைத்தொடர்கள், வகுப்புகள் ஆகியன இடம்பெற இருக்கின்றன. ஒலி, ஒளிப் புத்தகங்கள், இசை ஆக்கங்கள் என பல வடிவங்களிலும் பகுத்தறிவு, சமூகநீதி, பெண்ணுரிமை, ஜாதி ஒழிப்பு, அறிவியல் மனப்பான்மை ஆகியவற்றை முன்னிறுத்திய படைப்புகள் திரையிடப்படுகின்றன.

பெரியார் திரைப்ப டத்தைத் தயாரித்த லிபர்ட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் "Periyar Vision" ஒடிடியை உருவாக்கி வெளியிட்டுள்ளது.

இது ஆண்டிராய்டு தொலைக்காட்சிகளிலும், ஆப்பிள் மற்றும் ஆண்டிராய்டு செல்பேசிகளிலும் கண்டு பயன்பெற முடியும்.

'பெரியார் விஷன்' ஓடிடி அறிமுக விழாவையொட்டி, ஆண்டுக்கட்டணம் ரூ.588 உடன் இரண்டு ஆண்டுகள் கட்டணச் சலுகையும், காலாண்டுக் கட்டணம் ரூ.147 உடன் இரண்டு காலாண்டுகள் கட்டணச் சலுகையும், மாதக்கட்டணம் ரூ.49 உடன் இரண்டு மாதங்களுக்கான கட்டணச் சலுகையும் 31.7.2024 வரை அளிக்கப்படுகிறது.

'பெரியார் விஷன்' ஓ.டி.டி. தளத்துக்கான ஆண்டுக் கட்டணத்தை மோகனா வீரமணி அவர்கள் 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. பொறுப்பாளர் மதிசீலனிடம் வழங்கினார்.

விழா நிறைவில் 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. சார்பில் மதிசீலன் நன்றி கூறினார்.

### சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.11.14 கோடியில்

# 4 உடற்பயிற்சிப் பூங்காக்கள் - ரூ.42.70 கோடியில் ஆம்னி பேருந்துகள் நிறுத்தம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு!

சென்னை, ஜூலை 23-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (21.7.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.11.14 கோடி மதிப்பீட்டில் சென்னை வெளிவட்ட சாலையில் மீஞ்சூர், வெள்ளனூர், திருநாகேஸ்வரம் மற்றும் வரதராஜபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வரும் 4 உடற்பயிற்சி பூங்காக்களையும் மற்றும் முடிச்சூரில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.42.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்கான இடத்தினையும் (Idle Bus Parking for Omni Buses) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு கள ஆய்வு செய்து, நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் விரைந்து முடிக்க அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இது குறித்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரி வித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். சரியான திட்டமிடமில்லாமல் கடந்த ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட அந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு தேவைப்படுகின்ற பல்வேறு கட்டமைப்புகளை தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். அந்த வகையில் ஆம்னி பஸ்கள் நிறுத்துவதற்கு என்று தனியாக இடம் வேண்டுமென்ற ஆம்னி பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் வைத்த கோரிக்கையை ஏற்று சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் 42.70 கோடி ரூபாய் செலவில் ஒரு முறை 117 பஸ்கள் நிறுத்துகின்ற அளவிற்கு இந்த பஸ் நிலையம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதில் கழிப்பறை, குளியல் அறை என்று 14 உருவாக்கப்பட்டு இருக்கின்றது. அதேபோல் ஓட்டுநர்கள் மற்றும் அந்தப் பேருந்தை சுத்தம் செய்கின்ற கிளீனர்கள் போன்றோர் தங்குவதற்காக இரண்டு கட்டடங்களாக உணவு கூடத்துடன் கூடிய 100 பேர் தங்குகின்ற அளவிற்கு இரண்டு கட்டடங்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.

மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கா வண்ணம் நிலத்திலிருந்து உயர்த்தி கட்டப்பட்டு இருக்கின்றது. இந்த பேருந்து நிலையம் பயன்பாட்டிற்கு வரும் பொழுது நிச்சயமாக ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்கு காலையில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு சென்று அல்லது இரவிலே கிளாம்பா க்கத்திற்கு சென்று பயணிகளை ஏற்றி செல்வதற்கு இந்த முடிச்சூர் ஆம்னி பேருந்து நிலையம் வெகுவாக பயன்பாட்டிற்கு இருக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த பேருந்து நிலையம் உருவாக்கப்பட்டு இருக்கின்றது. அடுத்த மாத இறுதிக்குள் இந்த பேருந்து நிலையம் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு உண்டான நடவடிக்கைகளை எடுப்பதற்காக இன்று காலையில் இருந்து துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய காகர்லா உஷா, துறையினுடைய உறுப்பினர் செயலர் அன்பிற்கினிய அன்சுல் மிஸ்ரா ஆகியோர் இந்த ஆய்வினை மேற்கொண்டு இருக்கின்றோம்.

இந்த ஆய்வின் தொடர்ச்சியாக வெளிவட்டச் சாலை அமைந்திருக்கின்ற பகுதிகளில் சுமார் 63 கிலோ மீட்டர் அளவிற்கு 50 மீட்டர் அகலத்திற்கு சுமார் 65 ஏக்கர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது இந்த வெளிவட்ட சாலையில் 4 இடங்களில் உடற்பயிற்சி பூங்காக்கள். இந்த உடற்பயிற்சி பூங்காக்களில் திறந்தவெளி திரையரங்குகள், உடற்பயிற்சிக்கு தேவையான உபகரணங்கள், குழந்தைகள் விளையாடும் பகுதி, யோகா புல்வெளி, நடை பயிற்சி ஸ்டேடியம் போன்ற அனைத்து வசதிகளுடன் கூடிய ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் சென்னை வெளிவட்ட சாலையில் மீஞ்சூர், வெள்ளனூர், திருநாகேஸ்வரம் மற்றும் வரதராஜபுரம் ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதையும் இன்று காலை ஆய்வினை மேற்கொண்டோம்.

அதேபோல் ஒரு பத்து பிரிவுகளாக இருக்கின்ற சுமார் 53 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தை அரசு பயன்பாடு அல்லது மாற்று பயன்பாட்டிற்கு டெண்டர் விடுவதற்கு உண்டான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த இடங்களையும் இன்றைக்கு காலை பார்வையிட்டிருக்கும். சென்னை வெளிவட்ட சாலையில் அமைந்திருக்கின்ற அந்த இடங்களில் எச்டி பேரெழுத்த மின் கம்பி வடம், அதேபோல் நீர்நிலைப் பகுதிக்குள் வருகின்ற இடங்கள் இவைகளை தவிர்த்து பயன்பாட்டிற்கு சுமார் 400க்கும் மேற்பட்ட ஏக்கர் பொது பயன்பாட்டிற்கு உகந்த இடங்களாக இருக்கின்றது, அதையும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான திட்டமிடல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதையும் வெகுவிரைவில் தமிழ்நாடு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்று எந்தெந்த பகுதிகளை எந்தெந்த திட்டங்களுக்கு பயன்படுத்தலாம் என்று அவர்களுடைய அறிவுரையும் ஆலோசனையும் பெற்று அந்த இடங்களையும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான திட்டமிட்டு இருந்தோம். இன்றைய ஆய்வு மக்கள் பயன்பாட்டிற்கு மக்கள் பணிகளுக்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் முழுமையாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு செயல்படுகிறது என்பதற்கு இந்த ஆய்வு ஒரு எடுத்துக்காட்டு.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே.கோவிந்தராஜன், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், மீஞ்சூர் பேரூராட்சித் தலைவர் திருமதி. ருக்மணி மோகன்ராஜ், துணைத் தலைவர் பா. அலெக்சாண்டர், ஊராட்சி மன்ற தலைவர் கா.சு.ஜெகதீசன், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் ஆர். ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் (பொ) மா.பாலமுருகன் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கா.சு. தமிழ் உதயன் ஆகியோர் உடனிருந்தனர்.

### திருவாரூரில் மக்களுடன் நேர்காணல்!

# பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவாரூர், ஜூலை 22-

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், அபிவிருத்தீஸ்வரம் கிராமத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நடைபெற்ற மக்கள் நேர்காணல் முகாமில் 194 பயனாளிகளுக்கு ரூ.53 லட்சத்து 66ஆயிரத்து 27 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றியக்குழு துணைத்தலைவர் ஆர். பாலச்சந்திரன் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி மக்கள் நேர்காணல் முகாமானது ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வட்டம் வாரியாக தேர்வு செய்யப்பட்ட கிராமத்தில் நடத்தப்பட்டு வருகிறது. மக்கள் நேர்காணல் முகாமின் குறிக்கோளானது அரசு மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்து துறையின் துறை அலுவலர்கள் மூலம் மக்களுக்கு தெரியப்படுத்துவதே ஆகும்.

அபிவிருத்தீஸ்வரம் வளவநல்லூர், ஆர்பார் ஆகிய ஊராட்சிகளுக்கான மக்கள் நேர்காணல்முகாம் அபிவிருத்தீஸ்வரம் கிராமத்தில் நடை பெற்றது. நடைபெற்ற மக்கள் நேர் காணல் முகாமில், வருவாய்த்துறையின் சார்பில் 28 பயனாளிகளுக்கு ரூ.13 லட்சத்து 44ஆயிரம் மதிப்பீட்டில் விலையில்லா வீட்டு மனைப் பட்டாவும், 81 நபர்களுக்கு ரூ.38 லட்சத்து 88 ஆயிரம் மதிப்பிலான இணையவழி வீட்டுமனைப் பட்டாவும், 04 நபர்களுக்கு பட்டாமாறுதல் ஆணை, உட்பரிவு ஆணையினையும், மாவட்ட வழங்கல் துறையின் சார்பில் 45 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டையும், வேளாண்மை துறையின் சார்பில் 15 நபர்களுக்கு ரூ.27 ஆயிரத்து 720 மதிப்பில் மானிய விலையிலான இடுபொருட்களும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 4 நபர்களுக்கு மானிய விலையில் விதை, நாற்றுகளும், மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் 8 பயனாளிகளுக்கு ரூ.49 ஆயிரத்து 224 மதிப்பீட்டில் இலவச தையல் இயந்திரமும், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.33 ஆயிரத்து 450 மதிப்பிலான இலவச தையல் இயந்திரமும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.23 ஆயிரத்து 633 மதிப்பிலான இலவச தையல் இயந்திரமும் என 194 பயனாளிகளுக்கு ரூ.53 லட்சத்து 66 ஆயிரத்து 27 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சித் துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றியக்குழு துணைத்தலைவர் ஆர்.பாலசந்தர், அபிவிருத்தீஸ்வரம் ஊராட்சிமன்றத்தலைவர் வெற்றிதாமரை சின்னையா, வளவநல்லூர், ஆர்பார் ஊராட்சிமன்றத்தலைவர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதி கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் 7 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, ஜூலை 22-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

நேற்று முன்தினம் (20.07.2024) காலை 08.30 மணியளவில் ஒரிசா கடற்கரையை ஒட்டிய சில்கா ஏரி அருகில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலமானது வலுவிழந்து, நேற்று (21.07.2024) காலை 08.30 மணியளவில் ஒரிசா மற்றும் அதனை ஒட்டிய சத்திஸ்கர் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக நிலவுகிறது.

இதனால் 21.07.2024 மற்றும் 22.07.2024: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

23.07.2024 முதல் 27.07.2024 வரை: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 34 முதல் 35 டிகிரி செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 முதல் 28 டிகிரி செல்சியசை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




குன்றத்தூர் தெற்கு ஒன்றியம், படப்பை அருகே கரசங்காலில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். அருகில் மாவட்ட நிர்வாகிகள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., த.துரைசாமி, து.மூர்த்தி, வெ.விஸ்வநாதன் ஆகியோர் உள்ளனர்.




உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையத்தில் 11 புதிய பேருந்து இயக்கத்தை நேற்று (21.07.2024) தொடங்கி வைத்தார். அருகில் ஒட்டன்சத்திரம் நகர் மன்ற தலைவர் திருமலைச்சாமி. ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் திருமதி மு.அய்யம்மாள், திருமதி சத்தியபுவனா ராஜேந்திரன், வாடிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஜோதிஸ்வரன், நகர் மன்ற உறுப்பினர் கண்ணன். பொது மேலாளர் துரைச்சாமி, வணிக மேலாளர் சக்தி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.